# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 120 02—09—1994

இதழ்: 17 விலை ரூபா 5-00




செப்ரெம்பர் 11

ஞாயிறு

## யோசேவ் வாஸ் நாள்


* கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காககிறவன் கண் விழிப்பது வீண் *


செப்ரெம்பர் 9 கெய்ரோவில் உலக மாநாடு

# குடும்பத்தின் மதிப்பை பாதுகாக்கவேண்டும்

★ திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் வேண்டுகோள்

**பாலின நடவடிக்கை ஒழுக்க நெறியிலிருந்து பிரிக்கப்படுவதற்கு எதிராய் எச்சரித்துப் பேசிய திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர், மக்கள் தொகையை கட்டுப்படுத்தல் பற்றிய கெய்ரோ (எகிப்து) உலக மாநாடு குடும்பத்தின் மதிப்பைப் பாதுகாக்க வேண்டுமென்று அழைப்பு விடுத்தார்.**

பாப்பிறைகளின் கோடை விடுமுறை இல்லமான காஸ்ரல் கொண்டல்வோவிலிருந்து மூவேளை ஜெப உரை வழங்கிய திருத்தந்தை உலகமாநாட்டிற்கான தயாரிப்பு ஏடு, திருமணம் மற்றும் குடும்பத்திற்கான முக்கியத்துவம் கொடுக்காமல் பாலின நடவடிக்கையில் கூடிய தனிமனித வார்த்தைகளே பேசுவது போல் இருக்கின்றது என்பது குறித்த வருத்தத்தையும் தெரிவித்தார்.

வேகமாக அதிகரித்து வரும் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நோக்கத்தில் பொறுப்புடன் கூடிய பிள்ளைப் பிறப்புக் கலாசாரத்தை வளர்ப்பதற்கு மாறாக நன்நெறிக் கோட்பாட்டிலிருந்து விலகி நிற்கும் திருமண முறிவு மற்றும் பாலின நடவடிக்கையினை ஏற்பதற்கு அல்லது ஊக்கப்படுத்துவதற்கு கெய்ரோ மாநாடு இசைவு தெரிவித்தால் அது பெரும் அழிவாக இருக்கும் என்ற எச்சரிக்கையையும் முன்வைத்தார் திருத்தந்தை. சனத்தொகைக் குறைவு ஒரு பிரச்சனையாக மாறி உள்ள வளர்ந்த நாடுகளில் ஒழுக்க நெறி சார்ந்த பிரச்சனை குறித்து அதிர்ச்சி ஊட்டும் அடையாளங்கள் தெரிகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

போதைப்பொருள் உபயோகம், வன்முறை, மதிப்பீட்டுப் பழக்கம், வாழ்வைப் புறக்கணித்தல், இளைஞர்களின் பாராமுகம் போன்றவைகளையும் திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

## யோசேவ் வாஸ்
# கண்காட்சியும் கலை நிகழ்ச்சியும்

'இலங்கைத் திருச்சபைக் காவலர் யோசேவ் வாஸ்' முனிவருடைய முத்திப் பேறு பட்டத்தையொட்டி, யாழ் மறை மாவட்டத்தில் சிறப்பு நிகழ்ச்சியாக யோசேவ் வாஸ் முனிவரின் வாழ்க்கை, நற்செய்திப் பணி என்பவற்றை சித்தரிக்கும் கண்காட்சியும் கலை நிகழ்ச்சியும் மறைக் கோட்ட மட்டங்களில் பின்வரும் நாள்களில் நடைபெறவுள்ளன :

செப்ரெம்பர் 9, 10.

மானிப்பாய், புனித அந்தோனியார் ஆலயத்தில்.

செப்ரெம்பர் 12.

பருத்தித்துறை, புனித தோமையார் ஆலயத்தில்.

செப்ரெம்பர் 15, 16, 17.

யாழ்ப்பாணம், யாழ் மறைக் கல்வி நிலையத்தில்.

அருள்திரு G.V. பிலேந்திரன் தலைமையில் நடந்த 'ஊக்குவிப்பாளர்' கூட்டத்தில், ஒவ்வொரு பங்கிலும் வசதிக்கேற்ப செப்ரெம்பர் மாதத்தில் ஒரு வாரம் கொடிவாரமாக அனுட்டிக்க வேண்டுமெனும் தீர்மானமும் எடுக்கப்பட்டது.

# பழையன களைந்து புதியன புகுக

இலங்கைத் தமிழ்ப்புரட்சியாளர்களின் கட்டுப்பாட்டின் பகுதியின் மீதாயுள்ள பொருளாதார தடையை நீக்குவதற்கு அந்நாட்டுப் புதிய அரசு திட்டமிட்டு வருவதாக உதவிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கூறினார் என வத்திக்கான் வானொலி அறிவித்தது.

யாழ்ப்பாண மக்களின் நெருக்கடி நிலையினைப் போக்குவதற்கும் இலங்கையின் உள்நாட்டுச்சண்டையை முடிவுக்குக் கொண்டுவரவும் புதிய அரசு முயற்சித்து வருகின்றது என ரத்வத்த கூறினார்.

1983ஆம் ஆண்டு முதல் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் இடம் பெற்று வரும் சண்டையில் 30 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மற்றும் கோடிக்கணக்கான பணமும் செலவாயுள்ளது.

இலங்கையின் முந்திய அரசு யாழ்ப்பாணப் பகுதிக்கு மின்சாரப் பொம்மைகள், தீக்குச்சிகள், மிட்டாய், பற்றறி, மருந்து, எரிபொருள் உட்பட 42 பொருட்களுக்கு தடைவிதித்திருந்தது எனவும் வத்திக்கான் வானொலி தெரிவித்துள்ளது.

# மட்டு-திருமலைக்கு புதிய குரு இரத்தினம்



மட்டக்களப்பு, மூதூர் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த திருவாளர் வ. அ. இராசரெத்தினம், காலம் சென்ற திருமதி, இ. மேரி லில்லிதெரஸ் ஆகியோரின் அன்பு மகன், அருள் திரு. அந்தோனி அருள்தீன் நவரெத்தினம், 24-8-1994இல் மேற்படி ஆலயத்தில், மட்டக்களப்பு / திருகோணமலை ஆயர், பேரருள் திரு. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் குருவாகத் திருநிலைப்படுத்தப் படுத்தப்பட்டார். இவர் தமது ஆரம்பக் கல்வியை, மூதூர் புனித

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## புனித ஆரோக்கியநாதர் ஆலயத்தில்
# சமுதாயத்தில் இளைஞரின் பங்கு

புனித ஆரோக்கியநாதர் ஆலய பங்குக்குப் பொறுப்பாயுள்ள அருள்தந்தை சாள்ஸ் கொலின் அடிகளார் அவர்களின் தலைமையின் கீழ் 10-07-1994 அன்று ஞாயிற்றுக்கிழமை இளைஞர், யுவதிகளுக்கான ''சமுதாயத்தில் உனது பங்கு'' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று சென். றோக்ஸ் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

தொடக்க உரையாக பங்குத்தந்தை அவர்கள் பேசுகையில் இன்றைய தலைமுறையாக திகழ்கின்றவர்களாகிய இளைஞர், ஆன்மீக வளர்ச்சியில் மட்டுமன்றி கல்விக்கு காட்டும் மகத்துவம் பற்றியும் வளர்ந்து வரும் சிறார்களின் கல்வி வளர்ச்சியில் இளைஞர் கொடுக்க வேண்டிய அக்கறை பற்றியும் விசேடமாக எடுத்துக் கூறினார்.

(தொடர்ச்சி 3ஆம் பக்கம்)

# கிளிநொச்சியில் கலைப்பணி

யாழ். திருமறைக்கலா மன்றம் தனது கலைப்பணியை விரிவுபடுத்தும் நோக்கோடு, பங்கு ரீதியாக தனது செயற்பாட்டை பரவலாக்கியுள்ளது. இச்செயற்பாடானது யாழ். மறைவட்டத்துடன் மட்டும் நின்றுவிடாது, கிளிநொச்சி முல்லை மறைவட்டத்திற்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதன் முதல் நடவடிக்கையாக மன்றமானது 1944 ஜூன் 26, 27, 28 ஆகிய தினங்களில் கிளிநொச்சி, வட்டக்கச்சி, உருத்திரபுரம் ஆகிய பங்குகளில், மன்றத்திலிருந்து சென்ற 35 கலைஞர்களைக் கொண்டு எமது மறை சார்ந்த நாடகங்களையும் ('நெஞ்சக் கனகல்' 'சத்தியத்தின் தரிசனங்கள்') கலை நிகழ்வுகளையும் கருத்தரங்குகள், நாடகக் களப் பயிற்சி என்பவற்றையும், அப் பங்கு மக்கள் பயன்பெறும் வகையில் வெற்றிகரமாக நிகழ்த்தியது.

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

# அன்னை திரேசாவுக்கு பிறந்த நாள் பரிசு

இவ் வெள்ளியன்று 26-08-94 தனது 84வதுபிறந்த தினத்தைக் கொண்டாடிய அன்னை திரேசா வாழ்வுக்கான திருப்பீட அவையின் கௌரவ அங்கத்தினராக நியமிக்கப்பட்டார்.

திருச்சபையின் ஆசிரிய விதிகள் மற்றும் கிறிஸ்தவ நன்நெறி கோட்பாடுகளின் வழியில் மனித வாழ்வைப் பாதுகாத்து வளர்ப்பதற்கென கடந்த பெப்ரவரி 11ஆம் திகதி

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

# மடுத்திருப்பதியில் தியாக்கோன்களாக திருநிலைப்படுத்தல் நிகழ்வு

மடுத் திருப்பதியில் ஆலய அபிஷேகப் பொன்விழாவுக்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்த வேளையில் கடந்த ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி அன்று மன்னார் மறைமாவட்டத்தைச்சேர்ந்த நான்கு அருட்சகோதரர்கள் தியாக்கோன்களாக திருநிலைப்படுத்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

# அன்பகத்தில் பொன்விழா

மாதகல் மண்ணில் உதித்த அமல மரித் தியாகி அருள்திரு S. A. மைக்கேல் சாமி o.m.i. அடிகளாரின் குருத்துவப் பொன்விழா அரியாலை அன்பகத்தில் கொண்டாடப்பட்டது.

ஆகஸ்ட் 10ஆம்திகதி அன்று அத் திருத் ''தாத்தா'' வுக்கு

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

# எம்கருத்து

## நாளைய சமுதாயம் மலர....!

தனி மனிதனிலும் சமுதாயம் முழுவதிலும் முன்னேற்றம் காண வேண்டுமென்றால் குழந்தைப் பருவம் கவனமுடன் காக்கப்படவேண்டும். சமுதாயமும் மனிதத் தன்மையும் வளரவேண்டுமென்றால் குழந்தைகள் உயிரூட்டம் பெறவேண்டும்.

எந்த ஒரு குழந்தையும் திறமையற்றது, அறிவற்றது, ஒழுங்கற்றது என்று ஒதுக்கிவிட முடியாது. ஒவ்வொரு குழந்தைக்கும் அதற்கு ஏற்ற ஆற்றல்கள் இருக்கத்தான் செய்கின்றன.

குடும்பத்தில் குழந்தை வகிக்கும் பங்கு புனிதமானது. சமுதாயத்தில் குழந்தைகள் இல்லை என்றால் அங்கே உயிருமில்லை, வளர்ச்சியுமில்லை என்றுதான் பொருள்.

எனவேதான் குழந்தைகள் இளமைப் பருவத்தில் அதற்குரிய இடத்தில் வைத்து மதிக்கப்பட வேண்டும்; அன்புடன் பேணிக் காக்கப்படவேண்டும். குழந்தைகளை ஊக்குவித்து உற்சாகப்படுத்துவதும், குறிப்பாக நலிவுற்ற, ஊனமுற்ற, தாழ்வுற்ற குழந்தைகளின் நலனில் அக்கறை காட்டுவதும் அவசியம். அவர்களின் அவசிய தேவைகளை நிறைவு செய்ய வேண்டுமென்பதை குடும்பத்துக்கு வெளியே அதிகாரிகளும் அரசும் கருத்தில் கொள்ளவேண்டும்.

எந்த ஒரு நாட்டில் குழந்தைகளின் எல்லா நலன்களிலும் கவனமும், ஆதரவும், ஊக்கமும் செலுத்தப்படுகிறதோ அதைக்கொண்டுதான் அந்த நாட்டின் சமகால எதிர்கால பொருளாதார முன்னேற்றங்கள் வளர்ச்சி காணமுடியும். குழந்தைகளை உருவாக்குவதில் பணத்தையும் நேரத்தையும் இன்று செலவிடும்போது, நாளைய சமுதாய, பொருளாதார பிரச்சனைகளுக்குத் தீர்வு காணுபவர்களாவோம்.

குழந்தைகள் மட்டில் சமுதாயத்தின் அரசின் ஈடுபாட்டைவிட திருச்சபையின் பங்கேற்பு ஆழமானது. பிறந்த வளர்ந்த குழந்தைகள் நலனில் மட்டும் அக்கறை காட்டவில்லை; அன்னை கருவின் முதல் மணித் துளியிலேயே மானிட உயிரை மதிக்க அனைத்துலகையும் திருச்சபை அழைக்கிறது. தன்னலத்தின் பொருட்டு குழந்தைகளின் வாழ்வைப் பலியாக்கும் இரக்கமற்ற மானிடரின் அரக்கத் தன்மைக்கு எதிராகத் திருச்சபை வழிவகை தேட விழைகிறது.

வீட்டுக்கும் நாட்டுக்கும் திருச்சபைக்கும் எதெது தேவையோ, அத்தனையையும் ஈடுசெய்யும் மூலதனம் போன்ற ஆற்றல் குழந்தைகளிடம் உண்டு என்பதனை நாம் கண்கூடாகக் கண்டுவருகிறோம். சமுதாயத்திற்குத் தேவையானதை நிறைவுசெய்ய குழந்தைகளையும் மாணவர்களையும் ஊக்குவித்துப் பயன்படுத்துகிறார்கள். அவர்களும் காரியத்தை வெற்றிகரமாக முடித்துக் கொடுத்துவிடுகிறார்கள்.

குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் சமுதாயத்தின் எதிர்காலத்தைப் பற்றிய கவலைகள் அதிகம் உண்டு. அதனைப் பேணிக் காக்க வேண்டியது அவர்களை உருவாக்கும் பெற்றோர், ஆசிரியர்களது தலையாய கடமையாகும்.

நற்செய்தி அறிவிப்புப் பணியிலும் குழந்தைகளின் அப்போஸ்தலத்துவ ஆர்வம் குறைந்தது அன்று. குழந்தைகள் தங்கள் பெற்றோர்களையும் மற்றவர்களையும் புனித பாதைக்கு அழைத்துச் செல்லும் வல்லமை படைத்தவராயுள்ளனர். உள்ளம் கபடு அறியாத குழந்தையின் பேச்சு உண்மை உரைக்கிறது. கேட்போரைச் சிந்திக்க வைக்கிறது. அவரவர் நிலையை உணரச் செய்கிறது.

பெரியவர்கள் தங்கள் வாழ்க்கையில் குழந்தைகளைப்போல் எளிமையாகவும், வளைந்து கொடுக்கக் கூடியவர்களாகவும், மனிதனை மனிதனாக மதித்து வாழவேண்டும் என்பதனை உணர்த்தும் சக்திகொண்டவர்களாகவும் குழந்தைகள் இருக்கின்றனர்.

சமுதாயத்திற்கு குழந்தைகள் ஆற்றும் பணியின் பங்கு சிறியது அன்று. எனவே, குடும்பமும், அரசும், திருச்சபையும் அவர்கள் மட்டில் அதிக அக்கறை காட்டவேண்டும். அவர்களின் நலனுக்காக, அவர்களது தேவைகளைக் கவனிக்க ஆர்வம் கொண்டிருக்க வேண்டும். குழந்தைகளின் உயிரையும், திறமையையும் ஒவ்வொருவரும் குடும்பமும் உலகமும் மதித்தால் நாளைய சமுதாயம் மலர்ந்து மணம் பரப்பி பரிமளிக்கும் என்பதில் ஐயமில்லை.

# திருமறையைப் பரப்புதல்

**விவிலியக் கண்ணோட்டம்**

1. திருமறையை உலகெங்கும் பரப்பும் படி இயேசுநாதர் தாம் பரலோகத்திற்கு எழுந்தருளுமுன் அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டார்.

"விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள். பிதா, சுதன், பரிசுத்தஆவியின் பெயரால் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட அனைத்தையும் அவர்கள் கடைப்பிடிக்கும்படி போதியுங்கள். இதோ! நான் உலக முடிவுவரை எந்நாளும் உங்களோடு இருக்கிறேன்'' (மத். 28 : 18 - 20) என்றார்.

. அப்போஸ்தலர்கள் போதிக்க வேண்டிய திருமறையின் மையப்பொருள், இயேசு மனுக்குலத்தின் மீட்பர்: அவர் இரத்தம் சிந்திய தமது பாடுகளினாலும், மரணத்தினாலும் மனுக்குலத்தை மீட்டார், என்பதே.

அ) இசையாஸ் தீர்க்கதரிசி இவ்வாறு முன் அறிவித்தார்:

"அவரை வேதனையிலாழ்த்தி நொறுக்க ஆண்டவர் விரும்பினார். தம்மையே பாவத்திற்கு அவர் பலியாக்கினார். ... அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொண்டார். ... பலருடைய பாவத்தைத் தாமே சுமந்து கொண்டு, பாவிகளுக்காகப் பரிந்து பேசினார்" (இசை. 53 : 10, 11, 12).

ஆ) இசையாஸ் தீர்க்கதரிசி முன் அறிவித்ததை இயேசு நிறைவேற்றினார்:

"நல்ல ஆயன் நானே... என் ஆடுகளுக்காக என் உயிரைக் கொடுக்கிறேன். ... எனதுயிரை என்னிடமிருந்து பறிப்பவன் எவனுமில்லை. நானாகவே என்னுயிரைக் கையளிக்கிறேன்.'' (அரு 10 : 14, 15, 18)

"மனுமகன் பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவும், எல்லாருடைய மீட்புக்கு விலையாகத் தம் உயிரை அளிக்கவும் வந்தார்.'' (மத். 20 : 28)

''உடன்படிக்கைக்கான என் இரத்தம் இது : பாவமன்னிப்புக்கென்று எல்லாருக்காகச் சிந்தப்படும் இரத்தம்.'' (மத். 26 : 28)

3. வரப்போகும் மீட்பர் புறவினத்தாருக்கு ஒளி என்று முன்னரே அறிவிக்கப்பட்டது.

"யாக்கோப்பின் கோத்திரங்களை எழுப்பவும் இஸ்ராயேலில் எஞ்சினோரைத் திருப்பிக் கொணரவும் நமக்கு நீ ஊழியனாய் இருத்தல் பெரிதன்று. உலகத்தின் எல்லை வரையில் நமது மீட்பு எட்டும்படி புறவினத்தாருக்கு ஒளியாக உன்னை ஏற்படுத்தனோம்.'' (இசை. 49 : 6)

4. புனிதர் இராயப்பர் உரோமராகிய நூற்றுவர் தலைவன் கோர்னேலியுவுக்கும், அவனுடைய சகாக்களுக்கும் ஆற்றிய அருளுரை:

"கடவுள் மனிதர்களிடையே வேற்றுமை பாராட்டுவதில்லை. ... எக்குலத்தவனாயினும் இறைவனுக்கு அஞ்சி அவருக்கு ஏற்புடையதைச் செய்பவனே அவருக்கு உகந்தவன்.

அவர் தம் இஸ்ராயேல் மக்களுக்குத் தமது வார்த்தையை விடுத்து அமைதி உண்டாயிற்று என்னும் நற்செய்தியை இயேசுக்கிறிஸ்துவின் வழியாக அறிவித்தார். ... கடவுள் அவருக்குப் பரிசுத்தஆவியையும் வல்லமையையும் அளித்து, அபிஷேகம் செய்தார். கடவுள் அவரோடு இருந்ததால், அலகை துன்புறுத்திய அனைவரையும் குணமாக்கி, எங்கும் அவர் நன்மை செய்து கொண்டே சென்றார். இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்ததே. அவர் யூதேயா நாட்டிலும் யெருசலேமிலும் செய்த அனைத்திற்கும் நாங்கள் சாட்சிகள். அவரைக் கழுமரத்தில் ஏற்றிக் கொன்று போட்டனர். ஆனால், கடவுள் அவரை மூன்றாம் நாள் உயிர்ப்பித்தார், உயிர்த்தவரைக் கடவுள் அனைவருக்கும் வெளிப்படுத்தாமல், தம்மால் தெரிந்துகொள்ளப்பட்ட சாட்சிகளுக்கே வெளிப்படுத்தினார். இறந்தோரிடமிருந்து அவர் உயிர்த்தபின் அவரோடு உண்டும், குடித்தும் வந்த நாங்களே சாட்சிகள். வாழ்வோரையும் இறந்தோரையும் நடுத்தீர்க்க கடவுளால் ஏற்படுத்தப்பட்டவர் அவரே என்பதை மக்களுக்கு அறிவிக்க

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

### இவர் யார்?

துயரில்லை, மூப்பு மில்லை — என்றும்
சோர்வில்லை, நோயொன்று தொடுவதில்லை.
பயமில்லை பரிவொன்றில்லை — எவர்
பக்கமும் நின்று எதிரிப்பக்கம் வாட்டுவதில்லை.
நயமிகத் தெரிந்தவன் காண் — தனி
நடுநின்று விதிச் செயல் கண்டு மகிழ்வான்.
— தந்தை
நாழிகைக்கோர் புத்தி சொல்லி
நல்வழி காட்டுபவர் — தந்தை

★ R. அதிதி

# மரபுகளும் மாற்றங்களும்

— என். சண்முகலிங்கன்

## 19. துன்பத்தில் இன்பம்...?

1. துன்பத்திலும் சிரித்திருக்கும் மனப்பக்குவம் வேண்டும் என்பார்கள். துன்பவாழ்வில் தளர்ந்து போகாமல், உறுதியுடன் வாழ, இந்த சமநிலை துணையாகும் என்பது உண்மைதான்.

ஆனால் இன்றைய எங்களின் சிந்தனைக் கருவாகும் 'துன்பத்தில் இன்பம்...' மனித நடத்தையின் வக்கிரமான இரண்டு செயல்பாடுகளையே கருத்தில் கொள்ளுகின்றது.

i. **Sadism** - பிறர் துன்பப்பட கண்டு இன்பமடைதல்
ii. **Masochism** - பிறரால் துன்பப்படுவதில் இன்பம் காணுதல்

மிக நெருக்கமான முதல் நிலைக்குழுக்களான குடும்ப உறவிலிருந்து விரியும் சமூக உறவுகள்வரை இந்த வக்கிர மனப்பாங்கு இன்று வளரக்காணலாம்.

2. 'தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப் பிழை' என எங்கள் மரபுவழி வாழ்க்கைப்பங்காக இது தொடர்ந்திருந்தாலும், நவீன வாழ்வில் போட்டி முரண்பாடுகளின் அதிகரிப்புடன், இந்த வக்கிர செயல் பாடுகளும் அதிகரித்து செல்கின்றன. தன்னால் அடையமுடியாததை பிறரும் இழப்பதில் இன்பம், இன்பத்தை தேடும் முயற்சி - போராட்டத்தில் ஈடுபடுவதிலிருந்து ஒதுங்கிகொள்ளும் செயன்முறையாக அடிமைப்பட்டு கிடப்பதில், சேரழிவில் இன்பம்காண்பது என இந்த துன்பத்தில் இன்ப வாழ்க்கை தொடரக் காணலாம்.

3. மனித ஆளுமை விருத்தியின், சமூக மேம்பாட்டின் அடிப்படைகளையே தகர்த்துவிடும். இந்த இரண்டு வக்கிர வாழ்முறைகளையும் கைவிடாதவரை உய்வில்லை என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியமானது.

மனித இயல்பான அன்பினை வளர்த்துக்கொள்வதன்வழியும், மனித உறுதியை மேம்படுத்துதலின் வழியும் இந்த வக்கிர வாழ்முறைகளினின்றும் விடுதலை பெறவேண்டும். நாம் காண விரும்பும் அனைத்து விடுதலைகளுக்கும், இது பெரும் துணையாகும்.

# இல்லறத்தில் கணவன்—மனைவி

★ தொகுப்பு: என். மீரா

குடத்துள் விளக்குப்போல, கடத்துள் வாள்போல கணவன் மனைவியின் அகவாழ்க்கை அமையும் அன்புக்கூடம். இத்தகைய இல்லறம் குறித்து பண்டைத் தமிழர் மிக உயர்ந்த கொள்கை கொண்டிருந்தனர். அவர்களுக்கு அறம் என்பது வாழ்க்கையின் ஒருபகுதி மட்டுமன்றி, மாறாக வாழ்வு முழுவதுமே அறமாகும். எனவேதான், குடும்ப வாழ்க்கையை குடும்பம் என்ற சொல்லால் அழைக்காமல் இல்லறம் என்ற சொல்லால் அழைத்தனர்.

இல்லறத்தில் கிழவன் கிழத்தி, தலைவன் தலைவி, மக்கட்பேறு என்ற சொல்லாட்சிகளையே கையாண்டனர். பாரதியின் பார்வையிலே கணவன் பாண்டம், மனைவி பானம்.பாத்திரத்திற்கு சிறப்பு பானம். பானம் காக்கப்பட பாத்திரம் அவசியம். இத்தகைய உறவே இல்லறக் காதல் என்றான் பாரதி.

"பானமடி நீ யெனக்கு
பாண்டமடி நானுனக்கு"
என்றான்.

இன்னும் கணவன் கடல், மனைவி பௌர்ணமி நிலவு. பௌர்ணமி நிலவால் கடலுக்கு எழிற்சி. அதேபோல் கணவனுக்கு எழிற்சி மனைவியே என்பதனைப் பாடிய பாரதி "வெண்ணிலவு நீ யெனக்கு மீவுகடல் நானுனக்கு" என்றான்.

இல்லறவியல் என்ற பகுதியில் 5 முதல் 24 அதிகாரங்களை எழுதிய வள்ளுவப் பெருந்தகை இல்வாழ்க்கை என்ற தலைப்பில் 10 குறள்களை எழுதியுள்ளார். அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது என்றார். ஒருவனது இல்வாழ்க்கை அன்பும் அறனும் பொருந்தி இருக்குமானால் அவ்வாழ்க்கைக்கு அவ் அன்பே குணமும் அவ்அறமே பயனுமாகும் என்றார். அதேபகுதியில் அறமென்று சொல்லுதற்கரியது இல்வாழ்க்கையே என்று கூறிய திருவள்ளுவர்,

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பவன் முயல்வாருள் எல்லாம் தலை" என்றார். முறைப்படி இல்வாழ்க்கையில் வாழ்பவன் என்று சொல்லப்படுவன் தவம் செய்வோர் அனைவரிலும் தலைசிறந்தவனாவான்.

திருவள்ளுவர் இல்லறத்தானுக்கு என்று ஐந்து கடமைகளைக் குறிப்பிடுகின்றார். முன்னோர்களுக்கு ஆற்றும் கடமை, ஆராதனைமூலம் தெய்வத்திற்கு ஆற்றும் கடமை, விருந்தாளிகளை முகமலர்ந்து உபசரிக்கும் கடமை, தன்சுற்றத்தாருக்கும் தன்னையொத்த மற்ற உயிர்களுக்கும் ஆற்றவேண்டிய கடமை, தன் வாழ்வு மாசற ஆத்ம ஈடேற்றம் பெற ஆற்றவேண்டிய கடமை என்று சொல்லும் போது, இந்த ஐந்து கடமைகளுக்கு தனது வருமானத்தைப் பகிர்ந்து வாழ்வு நடத்த வேண்டுமென்கின்றார்.

இல்லறத்தான் சமுதாயத்தில் பழிக்கு அஞ்சி வாழவேண்டுமென்கிறார். மாதருக்குக் கற்புப் போன்று ஆண்களுக்கு பிறர்மனை நயவாமை வேண்டும் என்கின்றார்.

கணவனுக்கும் மனைவிக்கும் சோம்பல் கூடாது.

தற்காத்து தற்கொண்டான் பேணி...

சொற்காத்து சோர்விலாத பெண்ணாக இருக்கவேண்டும். அறிவு, செல்வம், ஆற்றல், ஈகை, புகழ் அனைத்திலும் தனது குடிநலம் மேன்மேலும் ஓங்குவதற்கு முயற்சியால் கணவன் முன்னுக்கு வரவேண்டும். குலப்பெருமை வேண்டித் தருமம் செய்வோன் பெருமையே பெருமை.

சங்க இலக்கியத்தில் காதலும் வீரமும் இரட்டைக் குழந்தைகள், காதல் அகத்திலும், வீரம் புறத்திலும் சொல்லப்பட்டது. இரண்டும் இரு கண்கள், ஆனால்ஒரேபார்வை. எனினும் வலக்காலும் வலக்கையும் வளமை வாய்ந்ததுபோல புறத்திலும் அகமே அதாவது குடும்பவாழ்வே சிறந்ததாக உயர்ந்தாக உணரப்படுகின்றது. ஏனெனில் நீர் போன்றது அகம், மரம் போன்றது புறம். உயிர் போன்றது அறம்,உடல் போன்றது புறம். இரண்டும் இணைந்ததே நிறைவாழ்க்கை, முழுவாழ்க்கை, வெறும் அன்பும் வெறும் அறிவும் கொண்ட வாழ்வு நிலை பெறாது எனவேதான் அகமும் புறமும் இணைந்து பின்னிக் கலந்த தமிழர் நாகரிகம் அழியாது, ஒழியாது, மங்காது மறையாது என்று சொல்லப்பட்டது.

பண்டைத் தமிழர் திருமணத்திற்கு முன் நிகழ்வதை களவொழுக்கம் என்றும் திருமணத்திற்குப் பின் நிகழ்வதை கற்பொழுக்கம் என்றும் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்தனர். திருமணத்திற்குப் பின் கற்பு ஒழுக்கத்தின் வழமையான கணவன் வீடு வசந்தம் இழக்கலாம். வறுமையுறலாம், எனினும் மனைவி தன் பிறந்த வீட்டை எண்ணாது முன்னிருந்த பெருமையோடு வாழப் பக்குவப்படவேண்டும்.இன்றும் குடும்பவாழ்வு குழந்தையின்றி முழுமைபெறுவதில்லை என்பது சான்றோர் கொள்கை. மக்கள் பேற்றின் இனிமையை "எழுபிறப்பும் தீயவை திண்டாப் பழிபிறந்தால் பண்புடை மக்கள் பெறின்." என்று வாழ்த்துகின்றது குறள்.

(நன்றி-வத்திக்கான் வானொலி)

விடுமுறை நாட்களின்
அனுபவ அலைகள்

● தமிழ் நேசன்

# குருத்துவ மாணவனின் எண்ணப் பதிவுகள்-4
# இழப்பதற்கு எதுவுமற்றவர்கள்

ஏதாவது இருந்தால்தானே இழக்க முடியும்? இவர்கள் அகதிகள்...! எதுவுமே அற்றவர்கள். ஆம் இழப்பதற்கு எதுவுமற்றவர்கள். எல்லாவற்றையும் இழந்து விட்டாலும் நம்பிக்கையை மட்டும் இன்னும் இழக்க வில்லை. மடுத் திருப்பதியில் உள்ள ஆயிரமாயிரம் அகதிக் குடிசை ஒவ்வொன்று உள்ளும் பல்வேறு சோகக் கதைகள் உறங்கிக் கிடக்கிறது. இவற்றை எல்லாம் யார் அறிவார்கள்?

இந்த மக்களின் சோக முகங்களும் உடைந்த உள்ளங்களும் எப்போது உருப்பெறுவது? இவர்களுக்கு ஏன் இந்த நிலை? சுதந்திர வாழ்வைப் பெற்றுக் கொள்ள இவர்கள் செலுத்த வேண்டிய விலை இதுதானோ? எனது மண்ணின் விடியலுக்கான இந்தப் பிரசவ வேதனை எப்போது முடிவடையும்? இது எனது கேள்வி மட்டுமல்ல. இந்த மண்ணில் வாழும் அனைவருடைய கேள்வியுமாகும்.

யாரும் இந்த அகதி வாழ்க்கையை விரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை. இவர்கள் இந்த வாழ்க்கையை வாழ நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறார்கள்...! பின்னேர வேளைகளில் மடு வீதியில் நடந்து சென்றால் அகதிகளின் அவல நிலை நெஞ்சை உறுத்தும். இத்துன்ப வாழ்வு இப்போது இவர்களுக்கு பழக்கப்பட்டு விட்டது...!

அகதிகளைப் பார்க்கும் வேளையில் அடிமனதில் எங்கோ ஒரு மூலையில் சந்தோஷம்...! என்ன...! என்று நீங்கள் கேள்வி கேட்பது எனக்குப் புரிகிறது. ஆம்... பல்வேறு சாதி சமய, பிரதேச மக்கள் இங்கு நன்றாகச் சேர்ந்து வாழ்கிறார்கள்... இல்லை சேர்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். எல்லாருமே பொருள் அற்றவர்கள் என்பதால் பொருளாதார சமத்துவம் இங்கு நிலவுகிறது. மனித வாழ்வுக்கு உத்தரவாதமோ பாதுகாப்போ இல்லாத ஒரு நிலையில் இறைவனை மட்டுமே பற்றிப்பிடிக்க வேண்டிய கட்டாயநிலை.

இவற்றையெல்லாம் சிந்தித்த போது நான் சந்தோஷப்பட்டேன். அகதிவாழ்க்கையில் கூட ஆண்டவன் எவ்வளவோ நன்மை செய்கிறார். (வளரும்)

## புனித ஆரோக்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து எழுத்தாளர் திரு. ஜோசப் பாலா அவர்கள் இளைஞர், யுவதிகள் இருவருக்குமிடையில் அறிமுகம் செய்து வைத்து அவர்களின் எதிர்கால இலட்சியங்களை கேட்டு தெரிந்து அதற்கு அமைவாக சில கருத்துக்களை எடுத்துக் கூறியும் குழுக்களாக பிரித்தும் சில நிகழ்ச்சிகளை நடாத்தினார். பின்பு ஆசிரியர் திரு அமலதாஸ் அவர்கள் "தலைமைத்துவம்" அதற்கு இருக்கவேண்டிய சிறப்பான தன்மைகள் என்பன பற்றி சிந்திக்க கூடிய வகையில் நகைச்சுவையாகவும், நீண்டதொரு சிறப்பான அம்சம் கொண்ட கருத்துரையை வழங்கி இளைஞர், யுவதிகளின் மனநினைக் கொள்ளை கொண்டார்.

இறுதியில் நன்றி உரையாற்றி ஆலய பராமரிப்புச் சபை உபசெயலாளர் திரு எஸ் பி. பீற்றர்போல் அவர்கள் இவ் ஆலயத்தில் இளைஞர் யுவதிகளுக்காக நடாத்தப்பட்ட முதல் கருத்தரங்கு இதுவே என்றும் இக்கருத்தரங்கு எமது சமூகத்திற்கு அவசியமானதாக அமைந்தது என்றும் கூறினார்.

செல்வி. ஜெ. நி. சாமினி.

# "புதுப்புனல்" மூலம் உறவுகள் வளரவேண்டும்

நான் யார்? நாம் யார்? அவன் / அவள் யார்? நமது வாழ்வு எப்படிப் போகிறது? நமது நோக்கம் என்ன? நம்மை வழிநடத்துவது எது? என்ற கேள்விகளுக்கு "புதுப்புனல்" விடை பகருகின்றது. நாம் இறைவனின் அன்புக்குரியவர்கள். இறைவனின் அருளால் கிறிஸ்துவிலும் ஆவியிலும் உயிருட்டம் பெற்றவர்கள். இப்படிப்பட்டவர்களான எமது கடமைகள் எவை? கிறிஸ்தவ விசுவாசிகளான எமக்குள்ளோ ஆழமான அன்புறவு வளரவேண்டும். மனிதரை மனிதனாக மதிக்கும் மானிடப்பண்பு வளரவேண்டும். எவ்விடயத்துக்கும் பொறுப்புள்ளவராகவும், ஒருவருக்கொருவர் கணக்கு கொடுக்கக் கடமைப்பட்டவராகவும் வாழும் பண்பு வளர வேண்டும். இவை உருவாக நாமே நம்மை நம்மில் வளர்த்தெடுக்கவேண்டும். இத்தகைய உறவு வளர்ந்தால் மட்டுமே உண்மையான கிறிஸ்தவ குழுமங்களை உருவாக்கலாம்.

எனவே இறைவனின் பிள்ளைகளாகிய நாம், கிறிஸ்துவில் ஒரே குழுமமாக வாழ்ந்து, பரிசுத்தஆவியின் ஊற்றினால், இறைவார்த்தையில் உந்தப்பட்டு அதை விசுவசிப்பவர்களாகவும், மறையறிவில் ஒருவரை ஒருவர் புரிந்து, நட்புடன் உறவாடி, பகிர்ந்து வாழ்ந்து ஒருவரோடு ஒருவர் உண்மை உறவை வளர்த்து ஒரு மனப்பட்டு வாழ்ந்து, அருட்சாதனங்களை தகுந்த முறையில் பெற்று பணிவாழ்வு வாழ 'புதுப்புனல்' உதவுவதாக. ஆவியின் அலைகள் நம் ஒவ்வொருவரையும் அடைந்து நாம் ஒரு இறைமக்கள் சமூகமாக மாறவேண்டும்.

திருமதி அ. அருள்ஞானசிலி
நெடுந்தீவு.

# 14ஆம் ஆண்டு நினைவுதினம் செப்ரெம்பர் 1
# நெடுந்தீவு தந்த திருமறையோன்

தவத்திரு S- X. தனிநாயகம் அடிகளார்

1913 ஆவணித் திங்கள் இரண்டாம்நாள் நெடுந்தீவில் உதயமாகி 1980 செப்ரெம்பர் திங்கள் முதலாம்நாள் பரமபாதம் அடைந்தார், படைத்தவனின் பணியாளனாய் அழைக்கப்பட்டு பாரினிலே பழந்தமிழ் பெருமை பாதுகாத்தவர். "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்லுவதிலோர் மகிமையில்லை, திறமான புதுமையெனில் வெளிநாட்டார் அதை வணங்கச் செய்தல்வேண்டும்" என்ற பாவலர்க்குச் சாரதியாம் பாரதியின் பாவடிகளுக்கு ஏற்ப பாரினில் பண்போடு வாழ்ந்தவர்.

தமிழ்பண்பாடு என்றால் என்ன? என்பதை மட்டுமல்ல தனியொருமனிதன் எவ்வாறு வாழவேண்டும் என்பதை வாழ்ந்து காட்டிய தனியொரு தகைசால் பண்பாளன்.

பொதுவாழ்வில் நாம் கொண்டு இருக்கவேண்டிய குணநலன்களை காட்டிச் சென்ற ஓர் அடலேறு போன்றவர்.

'என்றும் தமிழ்மொழியை வாழவைப்பதே' என்ற நல் இலட்சியத்தை தனிமனிதனாய் நின்று சாதித்துக் காட்டிய தனிப்பெருமையுடையவர்.

'தனிநாயகத்திற்கு சபாநாயகம் தேவையில்லை, என போராசிரியர்களால் புகழப்பட்டவர்.

இவர் அகில உலகெங்கும் சென்று செந்தமிழை தூவி முளைவிட்டு வளரச் செய்த தூதுப்பணியாளன். இப்பணியில் 1964இல் டில்லி மாநகரில் அகில உலகக் கலைஞர் மன்ற 24வது பொது மாநாட்டில் "அனைத்துலக தமிழாராச்சி மன்றத்தை" உருவாக்கினவர்.

1952இல் திருமறை சார்பாக "கத்தோலிக்க எழுத்தாளர் சங்கத்தை" ஏற்படுத்தி அதன் இயக்குநராக எளிலான சமயத் தொண்டு புரிந்து தமிழன்னையின் கலை நாயகமாக

"தோன்றிற் புகழோடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை
நன்று"

என்ற வள்ளுவனின் நல்வாக்குக்கிணங்க தோன்றி மறைந்தவர் எம் தவத்திரு S. X. தனிநாயகம் அடிகளார்.

S.K. பிரபு
புனித, மடுத்தீனார் குருமடம்
யாழ்ப்பாணம்.

## திருமறை...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வும் சாட்சியம் கூறவும் கடவுள் எங்களுக்குப் பணித்தார். அவரைக் குறித்தே இறைவாக்கினர் அனைவரும் சாட்சியம் பகர்கின்றனர். 'அவரை விசுவசிக்கும் அனைவரும் அவருடைய பெயரால் பாவ மன்னிப்புப் பெறுவர்' என்று அவர்கள் கூறுகின்றனர்! (அப். பணி 10 : 34 - 43)

# ஆசையே அழிவுக்குக் காரணம்

ஒவ்வொரு மனிதனும் ஆசை என்னும் இரண்டு எழுத்தை அடக்க முடியாமல் அழிவு என்னும் மூன்றெழுத்துக்கு சென்று கொண்டிருக்கின்ற இவ் 20ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலே நின்று இவ் ஆசை என்னும் கொடிய அழிவுப் பாதையை நற்செய்தி ஏடுகளிலிருந்து அவதானிப்போம்.

அனனியா என்ற ஒரு கிறிஸ்தவனுக்கு சபிராள் என்ற மனைவி இருந்தாள். அக்கால கிறிஸ்தவ சமுதாயத்தின் ஒழுங்கிற்கேற்ப தங்கள் நிலத்தை விற்றனர். விற்றதின் ஒரு பகுதியை அனனியா மறைத்து வைத்துக்கொண்டான். மறுபகுதியைக்கொண்டு போய் அப்போஸ்தலர்களின் பாதத்தில் வைத்தான். அவனது செயலில் ஏற்பட்ட இந்த முதல் கோணல் இறுதியாக முற்றும் கோணலாக மாறியது. அவனது மனைவி சபிராளும் அதற்கு உடந்தையாக இருந்தாள். தவறு செய்வதிலும் தீமைக்குத் துணை போவதிலும் இரண்டு பேருமே ஒற்றுமையாயிருந்தனர். ஆனாலும் அவர்களது கபடத்தனம் வெளியாயிற்று! அனனியா மட்டும் தனியாகவே அப்போஸ்தலர்களிடம்சென்றான். நான் விற்றதொகை இதுதான் என்றளவில் அப்பணத்தை அளித்தான். ''அனனியாவே நிலம் விற்றதில் ஒரு பகுதிப் பணத்தில் உனக்கென வைத்துக் கொண்டு மறுபகுதியை கொணர்ந்து இதுதான் முழுப் பணமென்று சாதிக்கலாமா? நீ ஏமாற்றுவது என்னை அல்ல. பரிசுத்த ஆவியைத்தான்! இத்தகைய துரோகத்தைச் செய்ய சாத்தான் உன்னைத் தூண்டியுள்ளது. நீ மனிதரிடமன்று கடவுளிடமே பொய் சொல்லுகின்றாய்'' என்று கூறினார் புனித இராயப்பர்.

அவரது மொழிகளைக் கேட்டதும் அவன் அப்படியே விழுந்து உயிர் விட்டான். அனைவரையும் அச்சம் ஆட்கொண்டது. ஒரு சில இளைஞர்கள் அவனது உடலைத் துணியால் மூடி வெளியே புதைக்கச் சென்றனர். சுமார் மூன்று மணிநேரம் பொறுத்து அனனியாவின் மனைவி சபிராளும் வந்தாள். கணவன் இறந்து புதைக்கப்பட்ட நிகழ்ச்சி அவளுக்குத் தெரியாது. நிலத்தை இவ்வளவு காசுக்குத்தானா விற்றீர்கள்? என்று இராயப்பர் அவளிடம் கேட்டார். அதற்கு அவள் ''ஆம் இவ்வளவுக்குத் தான்'' என்று அடித்துக் கூறினாள். முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைக்கும் புத்தி இது. பேராசையினால் உருவான ஒருவகை அற்பத்தனம் இது. ''உன் கணவனைப் போல் நீயும் பரிசுத்தாவிக்கு எதிராக பொய் சொல்லுகின்றாய். உன் கணவனைப் புதைத்துவிட்டு திரும்புகின்ற அதே இளைஞர்கள் உன்னையும் புதைப்பார்கள்'' என்று இராயப்பர் கூறினார். இதைக் கேட்டவுடன் அவள் அவரது காலடியில் விழுந்து இறந்தாள். அவளையும் அவளது கணவனின் அருகில் புதைத்தனர். (அப்.பணி 5:1-10)

இது ஒரு பரிதாபகரமான சோகம் நிறைந்த எடுத்துக் காட்டு. இவர்களது அழிவுக்கு முக்கிய காரணம் ஆசையே. ஆனாலும் ஒரு வரம்புக்குட்பட்டு எந்த ஆசையும் உருவாகும் போது, அத்தகைய ஆசையை அடைவதில் தவறு ஒன்றுமில்லை ஆனால் வரம்பை மீறிச் செல்லும் போதோ, பேராசை கொள்ளும்போதோ ஏமாற்றுகின்ற புத்தியிருந்தால் அந்த ஆசையே அவனுக்கு சாவுமணி அடிக்கும். இது ஒரு நமது நம்பிக்கையல்ல. மாறாக இதுதான் எம் நாட்டில் நாம் காணுகின்ற ஆசையின் பிரதிபலன் அழிவுகள் என்பதை தெளிவாக புலப்படுகின்றது. கண்ணதாசன் ஒரு முறை சொன்னார்.

மண்ணாசை வளர்ந்து விட்டால் கொலை விழுகிறது.

பொன்னாசை வளர்ந்து விட்டால் களவு நடக்கிறது.

பெண்ணாசை வளர்ந்து விட்டால் பாவம் நிகழ்கிறது.

தற்போதைய மனிதர்கள் இம் மூன்று ஆசைகளுடன் நிம்மதியைத் தேடி அலைகின்றனர். ஆனால் நிம்மதி கிடைப்பதில்லை. ஆம், இந்த மூன்று ஆசையில் எந்த ஒரு ஆசை இருந்தாலும் அவனுக்கு நிம்மதி கிடைக்காது. ஏன்! சிறைச் சாலைகளில் வாழும் பெரும் பாலானோர் ஆசைக் குற்றவாளிகளே. எந்தச் சிறு ஆசையும் தவறாக இருக்கும் போது அதை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும். நாளடைவில் அது பேராசையாக மனிதன் அதிலிருந்து விடுபட இயலாதவனாக அந்த ஆசைக்கே அடிபணிந்தவனாக மாறிவிடுகின்றான். ஆனால் அத்தகைய ஆசையிலிருப்பவன் எத்தகைய குற்றத்தையும் செய்யத் தயங்க மாட்டான்.

''ஆழமுள்ள கிணற்றின் விளிம்பில் நிற்பவன் அதனுள் விழுந்து விடாமல் எப்பொழுதும் எச்சரிக்கையாய் இருப்பதைப் போல், உலக வாழ்க்கையை மேற்கொண்டவன் ஆசாபாசங்களில் அமிழ்ந்து விடாமல் இருக்க வேண்டும். ஆசையின் பிறப்பிடம் மனித மனம், அந்த மனத்தைச் சிறகடிக்க விடக்கூடாது மனம் ஒரு குரங்கு. அது ஓரிடத்தில் நிலைத்திருப்பதில்லை. தாவிக்கொண்டே இருக்கும். ஒருவிஷயம் எனக்கு தெரிந்தால் நூறு விஷயங்களை மனது வளர்த்து கொள்கின்றது.

கட்டுப்படுத்தப்படாத ஆசை அவிழ்த்து விடப்பட்ட யானைக்கு ஒப்பாகும். அது வரை முறையின்றி மரம், செடி கொடிகளையெல்லாம் பிடுங்கி எறிகின்றது. இதே போலதான் தற்போதைய மனிதன் ஆசை என்னும் பெருங் கடலில் மூழ்கி கலங்கரை வெளிச்சம் தெரியாமல் தத்தளித்துக் கொண்டு நிற்கின்றான். சின்ன சின்ன ஆசையாக வேரூன்றி வானவில்லை உடுத்திக் கொள்ளும் ஆசையாக வளர்ந்து கிளை விட்டு அழிவுப் பாதையை நோக்கிச் செல்கின்றது.

ஆசை என்ற யானையை அறிவு என்னும் அங்குசத்தால் அடக்கி வாழும் மனிதன் எவனோ அவனே மனிதன். அவன் நிம்மதியை அடைவான். இறைவனின் பிள்ளையாவான், இறைவனின் அப்போஸ்தலனாவான். மற்றோர்களால் சான்றோன் எனப் பெயர் பெறுவான்.

அவனது வாழ்வு புனித கோவிலாக எந்நாளும் திகழும்.

● பா. செல்வநாதன்

## ஆசிரியருக்குக் கடிதம்

### கலாமன்ற கூத்தரங்கு

கடந்த 31.7.94 யாழ். திருமறைக்கலாமன்றம் ''நடாத்திய கூத்தரங்கு'' தீர்ப்பு மனவேதனை கொடுத்தது. தமிழ் ''பழைய 'தமிழ் கத்தோலிக்க மரபு'' கூத்து என்றும் அடிப்படையில் போட்டியை நடாத்திவிட்டு, பல இசை அடக்கங்களைக் கொண்டு விளங்கிய இரு பழைய கத்தோலிக்கமரபில் அமைந்தபுனிதகிறிஸ்தோப்பர், புனிதவதி நாடகம் என்பவை பின் தள்ளப்பட்டமை இப்போட்டியின் தீர்ப்புப் பற்றி பலவிதமானசந்தேகங்களைஏற்படுத்தி உள்ளது. இப்போட்டியில் திருமறைக்கலாமன்றம் நாட்டுக் கூத்துப் பொறுப்பாளரின் கூத்து ஒன்றும் போட்டியில் பங்குபற்றியது குறிப்பிடத்தக்கதாகும்.

போட்டியில் இடம்பெற்ற மூன்று நாடகங்களிலும் உள்ள குறைநிறைகளை தெளிவாக விளக்கி, தாம் பழைய கத்தோலிக்க மரபு ரீதியான போட்டி என்பதன் அடிப்படையில் போட்டி முடிவுகளை அறியத் தந்திருந்தால் மத்தியஸ்தத்தை பாராட்டியிருக்கலாம். ஆனால் நிர்வாகத்தால் அப்படியான சந்தர்ப்பம் நாட்டுக்கூத்து போட்டி ஆரம்பமாவதற்கு முன்பாகவோ, பின்பாகவோ வழங்கப்படாதது இரசிகர்களிடையே பலத்த ஆட்சேபங்களை எழுப்பியுள்ளது. இன்றைய அளவில் பல சாதனைகளை புரிந்து வரும் யாழ். திருமறைக்கலாமன்றம் இப்போட்டி முடிவு பற்றிய தெளிவான உண்மை, மத்தியஸ்தம் ஆகியவற்றை மக்கள் மன்றத்திற்கு கொண்டு வர உதவி புரியுமா? தமிழ் கத்தோலிக்க இதழான பாதுகாவலன் இவ் உண்மையை கத்தோலிக்க மக்கள் அறிவதற்கு கொண்டு வந்து நீதி வழங்க ஆவன செய்யுமாறு கேட்கிறேன்.

யோசவ் திரேசம்மா
கொழும்புத்துறை

### 'அழகு அமைப்பு'

அரிய பல செய்திகளை அள்ளித் தரும் உங்களுக்கு எனது பாராட்டுக்கள். எனினும் கடந்த 19 08.94 பாதுகாவலனில் கிறிஸ்து திருச்சபையை நிறுவினார் என்ற தலைப்பில் ''அழகு சிந்தும் அமைப்பு'' என்ற பகுதியில் தலைப்பிற்கேற்ற செய்திவிளக்கம் சற்று குறைவாகஇருந்தது.

சி. ராதா, சுண்டிக்குளி.

# ஆசா. யோசேவ் வாஸ் முனிவர் வாழ்வும் - பணியும்

பகுதி — II

(சென்ற இதழ் தொடர்ச்சி)

(26) யோசேவ்வாஸ் முனிவர் கிறிஸ்தவர்களுக்கு தொண்டாற்றுவதற்காக கண்டிக்கு வெளியே சென்றிருந்த போது கண்டியில் என்ன நடந்தது?

கத்தோலிக்க மதத்தின் எதிரிகள் அரசனுக்கு அவரைப் பற்றி பொய்யான முறைப்பாடுகளைச் செய்து கார்வாலோ சுவாமிகளை நகருக்கு அப்புறப்படுத்தி கண்டியில் இருந்த தேவாலயத்தை தரைமட்டமாக்கினர்.

(27) 1702 இல் கார்வாலோ சுவாமிகள் கடும் நோயால் பீடிக்கப்பட்டு யூலை மாதம் 22 ஆம் திகதி இறந்த பின் அவருடைய இடத்தை நிரப்ப தியான சம்பிரதாய சிரேஷ்டர் யாரை அனுப்பினார்?

பேதுரு டா சல்தானா சுவாமிகளை.

(28) 1704 இல் இலங்கைத் திருச்சபையின் நிலை எப்படி இருந்தது?

4 குருமார் ஞானத் தொண்டாற்றி வந்தனர். கண்டி, புத்தளம் மாதோட்டம் முதலிய இடங்களில் பிரசித்த ஆலயங்கள் இருந்தன. மற்றைய இடங்களில் ஏறக்குறைய 50 சிற்றாலயங்கள் இருந்தன. இவற்றில் விசுவாசிகள் ஒவ்வோர் இரவிலும் பக்தி முயற்சிகளைச் செய்து வருவார்கள். கண்டி, வன்னி, மாதோட்டம் ஆகிய பகுதிகளில் பிரதான திருநாட்கள் சுற்றுப்பிரகாரங்களோடு வெகு ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டு வந்தன. யாழ்ப்பாணம், மாதோட்டம், கண்டி, வன்னி முதலிய பகுதிகளில் மாத்திரமே 30,000 க்கு அதிகமான கத்தோலிக்கர்கள் இருந்ததாக கணிக்கப்பட்டுள்ளது.

(29) புதிய சுவிசேஷ தொண்டர்களின் தேவை அவசியம் என்று தமது சிரேஷ்டருக்கு விண்ணப்பித்த போது அவர் அனுப்பி வைத்தவர்கள் யார்?

யாக்கேமே கொன்சால்வேஸ், மிகுவெல் டேமெல்லோ, யோசே டே சமறியா, மனுவல் டே மிறாண்டா என்னும் சுவாமிகள் ஆவர்.

(30) பணிகள் எவ்வாறு பகிரப்பட்டன?

இலங்கை முழுவதையும் பல பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவுக்கும் ஒவ்வொரு குருவானவரைப் பொறுப்பாளராக நியமித்தார். எல்லா இடங்களையும் தரிசிக்கும் பொறுப்பை யோசவாஸ் அடிகள் தமச்கென வைத்துக் கொண்டார். தமிழையும் சிங்களத்தையும் நன்றாகக் கற்று விசுவாசிகளுடைய தேவைக்கேற்ப ஞான நூல்களை இயற்றும் பொறுப்பை யாக்கோமே கொன்சால்வேஸ் சுவாமிகள் மேல் சுமத்தினார்.

(31) மெனசாஸ் சுவாமிகள் பொறுப்பாக இருந்த பகுதிகள் எவை?

யாழ்ப்பாணம், பூநகரி, புதுக்குடியிருப்பு, அளம்பில், திருகோணமலை, மட்டக்களப்பு, தமங்கடுவ.

(32) 1706 இல் ஒல்லாந்து அதிகாரிகள் ஞானஸ்நானம், மெய்விவாகம் என்னும் சடங்குகளை கல்வின் மதமுறைப்படி செய்ய வேண்டுமென்றும், கத்தோலிக்கரெல்லாரும் கல்வின் மத ஆலயங்களுக்கு சென்று போதகம் கேட்க வேண்டுமென்றும் சட்டம் விதித்த பொழுது எவ்வாறு நடந்து கொண்டார்?

அதை எதிர்த்து தேசாதிபதிக்கு விண்ணப்பப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பிக்கும்படி கொழும்புக் கத்தோலிக்க மீன்பிடிகாரரைத் தூண்டியதோடு, கத்தோலிக்கர் பேரால் தாமும் ஒரு விண்ணப்பப் பத்திரத்தைச் சமர்ப்பித்தார்.

# மடுத்திருப்பதியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஆலய அபிஷேகப் பொன்விழா

❊ தமிழ் நேசன்

முழு இலங்கை மக்களுடைய கத்தோலிக்க விசுவாசத்தின் சின்னமாகவும், யாத்திரைத் தலமாகவும் செப வீடாகவும் விளங்கி வரும் மடுத்திருப்பதியின் ஆலய அபிஷேகப் பொன் விழா கடந்த ஆவணி மாதம் 15ஆம் திகதி அன்று இடம் பெற்றது. போக்குவரத்து வசதிகள் இல்லாத இப்போர்க்கால சூழ்நிலையிலும் ஏறக்குறைய 75 ஆயிரம் யாத்திரிகர்கள் மடு அன்னையின் புகழ்பெற்ற திருத்தலத்திற்கு வருகைதந்து இவ்வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வை சிறப்பித்தனர்.

புதுமைகள் புரியும் மடு அன்னையின் புகழ்பெற்ற சுரூபம் பற்றிய வரலாறு 16ஆம் நூற்றாண்டில் இருந்து ஆரம்பமாகிறது. ஏறக்குறைய 1544 ஆம் ஆண்டளவில் இயேசு சபையைச் சேர்ந்த மறை போதகர்களால் கிறிஸ்தவம் மன்னாரில் வேரூன்றி வளரத் தொடங்கியது. ஆரம்ப நற்செய்தி அறிவிப்புக்குப் பின்னர் உடனடியாகவே 600 க்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் வேதத்தின் சாட்சிகளாக இரத்தம் சிந்தினார்கள்.

துன்புறுத்தல்களினாலோ, வேத சாட்சி மரணங்களினாலோ இம்மண்ணின் விசுவாசம் இறந்து விடவில்லை. மாறாக ஆயிரக்கணக்கில் மக்கள் கத்தோலிக்க விசுவாசத்தை தழுவிக் கொண்டனர். கிறிஸ்தவர்கள் நிறைந்து வாழும் கிராமங்களில் ஒன்றாக மாந்தை அக்காலத்தில் சிறந்து விளங்கியது. இக்கிராமத்தில் இருந்த ஆலயமே மடு அன்னையின் திருச்சுரூபம் இருந்த தொடக்க கால வீடு ஆகும். அப்போது இத்திருச் சுரூபம் ஆரோக்கியமாதா என்ற பெயராலே அழைக்கப்பட்டது.

நாட்டின் கரையோரப் பகுதிகளில் இடம்பெற்ற ஒல்லாந்தரின் துன்புறுத்தல் காரணமாக 1670 ஆம் ஆண்டில் இத்திருச்சுரூபம் இன்றைய மடுத் திருப்பதிக்குக் கொண்டு வரப்பட்டது. கண்டி இராச்சியத்துக்கு சொந்தமான அடர்ந்த காட்டின் மத்தியில் இருந்த இன்றைய மடு அக்காலத்தில் மருதமடு என அழைக்கப்பட்டது. குருக்களோ, மறை போதகர்களோ இல்லாத ஒரு நிலையில் எமது முன்னோர் தமது விசுவாசத்தைக் கட்டிக் காத்து வளர்த்தனர். தேவ அன்னையின் மட்டில் இருந்த வணக்கமும், செபமாலை சொல்லும் பழக்கமுமே இவர்களின் விசுவாசத்தை பல காலங்களாக காத்து வந்தது குறிப்பிடத்தக்கது.

இன்றைய ஆலயத்தின் அத்திவாரக் கல்லானது 1872 ஆம்ஆண்டில் ஆயர் பொன்சீன் ஆண்டகையால் நாட்டப்பட்டது. படிப்படியாக அவரைத் தொடர்ந்து வந்த ஆயர்களின் முயற்சியினாலும், உழைப்பினாலும் இன்று நாம் காணுகின்ற இந்த அழகான பெரிய ஆலயம் படிப்படியாக வடிவமைக்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டது.

மடுத்திருப்பதியின் ஆலய அபிஷேகமானது 1944 ஆம் ஆண்டு யூன் மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்றது. மரத்தாலான பழைய பீடமானது பளிங்குக்கல்லினால் வடிவமைக்கப்பட்டதுடன் முழுப் பீடப்பகுதிக்கும் வெள்ளை மற்றும் நீலப் பளிங்குக் கற்கள் பதிக்கப்பட்டன. நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்த 30,000க்கும் அதிகமான மக்கள் மத்தியில் 30 குருக்கள் சூழ்ந்து நிற்க அன்றைய யாழ் ஆயர் கியோமர் ஆண்டகை அவர்கள் பீடத்தை அபிஷேகம் செய்தார். புனிதர்களான வேபியன், செபஸ்ரியன், அக்னெஸ் ஆகியோரின் திருப்பண்டங்களே இப்பீடத்தினுள் வைக்கப்பட்டவையகும்.

ஐம்பதாவது ஆண்டு ஆலயம் அபிஷேகப் பொன்விழாவானது இவ்வாண்டு ஆவணி மாதம் 15ஆம் திகதியன்று மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசவ் ஆண்டகை அவர்களின் வழி நடத்தலிலும் தலைமையிலும் இடம்பெற்றது. பொன்விழா மற்றும் விண்ணேற்பு விழா ஆகியவற்றின் தொடக்கமாக ஆகஸ்ட் 6ஆம் திகதி கொடியேற்றப்பட்டது. மடுப் பரிபாலகர் அருள்திரு பி. யேசுறாஜா அடிகளார் ஏனைய குருக்கள், துறவிகள், இறைமக்களோடு இணைந்து இவ்விழாவுக்கான ஆயத்தங்களை சிறப்பாக மேற்கொண்டிருந்தார்.

மன்னார், வன்னி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து வீடு வாசலை இழந்த 20,000க்கும் மேற்பட்ட அகதிகளின் புகலிடமாக மடுத்திருப்பதி இன்று விளங்குகிறது. இந்த மக்களோடு அயல் மாவட்டங்களில் இருந்தும் பெருந்தொகையாக யாத்திரிகர்கள் இவ்விழாவுக்கு வருகை தந்திருந்தனர். இன்றைய போர்க்கால சூழ்நிலை காரணமாக மன்னார் தீவிலிருந்தும் நாட்டின் தென்பகுதியில் இருந்தும் மக்கள் இவ்விழாவுக்கு வருகைதரமுடியவில்லை. திடீரென வெளியாகிய தேர்தல் அறிவிப்பினால் தென்பகுதி ஆயர்கள், குருக்கள், துறவிகள் இறைமக்கள் ஆகியோரின் வருகை தடைப்பட்டது வருத்தத்திற்குரியது. ஆயினும் பொன்விழா இறுதிநாள் திருப்பலிக்கு ஏறக்குறைய 75 000 பேர் மட்டில் வந்திருந்தனர். அநுராதபுர ஆயர் அதிவந். ஜோய் ஹென்றி குணவர்த்தனா மற்றும் மன்னார், யாழ்ப்பாணம், அநுராதபுரம், கொழும்பு ஆகிய மறைமாவட்டங்களில் இருந்து 45குருக்கள் இப்பொன்விழாத் திருப்பலியில் பங்கேற்றனர்.

இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த இரட்சணிய சபையைச் சேர்ந்த அருள் திரு சுரேஸ் புஸ்பறாஜா அடிகள் மற்றும் யாழ் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருள்திரு மரிய செபஸ்ரியன் அடிகள் ஆகியோர் மறையுரைஞர்களாக விளங்கினார்கள்.

பொன்விழாத் திருப்பலி மறையுரையின்போது மன்னார் ஆயர் இராயப்பு ஜோசவ் ஆண்டகை அவர்கள் "மடுத் திருப்பதியிலே இப்பொன் விழாத் திருப்பலியில் பங்குபற்றும் எல்லா யாத்திரிகர்களோடும் இணைந்து நாட்டின் எல்லா இடங்களிலும் வாழும் மடு அன்னையின் ஆசீரையும் எனது அன்பு கலந்த சமாதான வாழ்த்துக்களையும் இவ்வேளையில் அனுப்பி வைக்கின்றேன்" எனக் குறிப்பிட்டார்.

## கண்ணீர் அஞ்சலி



இராயப்பு பொன்னுத்துரை
(அம்மான்)

மண்ணில் 04-06-1898
விண்ணில் 20-07-1994

கண்மூடித் திறப்பதற்குள்

கடந்துவிட்டதோர் திங்கள்

எத்திசை யாம் ஏகிடினும்

எம்முடனும்நினைவு—ஐயா!

A/35/94 பண்டத்தரிப்பு.



திருமதி றெஜீனா சொர்ணம்
நவரத்தினசிங்கம்

மண்ணில் 04-10-1910
விண்ணில் 26-07-1994

ஆளாக்கி எம்மையெல்லாம்
அடியெடுக்க வைத்துவிட்டு
மீளாத் துயில் கொண்ட
எமதருமை அன்னையே!
நீங்காதும் நினைவு
எம் நெஞ்சில் என்றும்
தூங்காது கண்களில்
துளிர்த்திடும் நீர்த்துளிகள்.

மக்கள், மருகர், பேரர்.

## கிளிநொச்சி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி முல்லை மறைவட்ட முதல்வரின் வேண்டுகோளுக்கிணங்க கிளிநொச்சியில் பயிற்சிபெறும் மறை ஆசிரியர்களுக்கான நாடகம் சார்ந்த பயிற்சிகளை மேற்கொள்ளவும், பயிற்சி முடிவில் மேடையேற்றத்தக்க வகையில் ஓர் நாடகத்தை நெறிப்படுத்தவும் மன்றத்திலிருந்து திரு G.P. பேர்மினஸ், திரு.J. யோண்சன் ஆகியோர் அங்கு சென்று 4 நாட்கள் தம்பணியை சிறப்புற மேற்கொண்டனர்.

தொடர்ந்தும் இவ்வாறான பணிகளை கிளி/முல்லை மறை வட்டத்தில் மேற்கொள்ள திருமறைக் கலாமன்றம் முயற்சிகளை எடுத்துவருகின்றது.

தகவல்: யோ. மரியாம்பிள்ளை

## ST. PATRICK'S COLLEGE, JAFFNA
## அனுமதி விண்ணப்பம் - 1995

பின்வரும் வகுப்புகளுக்கு மட்டுமே மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முதலாம் ஆண்டு:- 01-02-89 — 31-01-90 (இரு திகதிகளும் உட்பட) பிறந்திருக்க வேண்டும்.
நான்காம் ஆண்டு:- 1986இல் பிறந்திருக்க வேண்டும்.
ஆறாம் ஆண்டு:- 1984இல் பிறந்திருக்கவேண்டும்.
ஒன்பதாம் ஆண்டு:- 1981இல் பிறந்திருக்க வேண்டும்.

★ விண்ணப்பப் பத்திரம் (பரீட்சைக் கட்டணம் உட்பட) ரூபா. 100/= 05-09-94 தொடக்கம் 23-09-94 வரை பாடசாலை நேரங்களில் காலை 9.00 — பி.ப. 1.00 வரை கல்லூரி காரியாலயத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 26-09-94ஆம் திகதிக்கு முன் கல்லூரி காரியாலயத்தில் காலை 9.00- நண்பகல் 12.00 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ அனுமதி பரீட்சைத் தினம் 08-10-94 காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

| ஆண்டு | சமுகம் தரவேண்டிய நேரம் (காலை) | பரீட்சை ஆரம்பம் காலை |
|---|---|---|
| 9 | 8.00 | 8 30 |
| 6 | 8.00 | 8.30 |
| 4 | 8.00 | 8.30 |
| 1 (இல: 01-100) | 8.00 | 8 30 |
| 1 (இல:101-250) | 10.30 | 11 00 |

★ 6ஆம், 9ஆம் வகுப்புகளுக்கு நடாத்தப்படும் அனுமதிப் பரீட்சையில் 85% திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமை போல் யாழ் ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

கல்லூரி அதிபர்

## செபமாலைத் தாசர் சபை அழைக்கிறது...

இளைஞனே...

உன் இளமைப்பருவம்,

சிந்தனைகள், இலட்சியங்கள் முகிழ்த்தெழும் பருவம்... சிந்திக்கிறாயா...?

இந்த உலகில்—
எதில் நீ நிறைவான இன்பம் காண்கிறாய்?
எதை நீ நித்தியம் என்கிறாய்?
எதில் நீ நிறைவு காண்கிறாய்?

"ஒருவன் உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் அவன் ஆன்மாவுக்கு கேடு விளைந்தால் அவனுக்கு வரும் பயன் என்ன?" (மத் 16; 26)

செபவாழ்வினால் ஆன்மாக்களையும் ஆதாயமாக்கி, உன்னையும் நித்தியமாக்கி, நிறைவடைய கிறீஸ்து உன்னை அழைக்கிறார்...

இளைஞனே,

இறையன்பின், அழைப்பின் குரலொலி கேட்கிறதா?
இறை சேவைச் சிந்தனையே ஓர் அழைப்பின் குரலொலி தான்!
உன் இதயத்தில் இந்த ஆசை எழுந்தால்,

உன்னை உயர்த்தி வைக்க, உன் இலட்சியத்தை ஈடேற்றி வைக்க காத்திருக்கிறது **செபமாலைத் தாசர் சபை.** காலங் கடத்தாது உடனே தொடர்பு கொள்.

- பத்தாம், பதினொராம், உயர்தர வகுப்பினரும், அதற்கு மேற்பட்டோரும் தாமதியாது தொடர்பு கொள்க.
- குறிப்பிட்ட தொகையினர் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவதால் 28-09-94க்கு முன் விண்ணப்பிக்க.

தொடர்பு கொள்ளும் முகவரி:

அதிபர்
செபமாலைத்தாசர் சபை
அருள் ஆச்சிரமம்
5, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

## கெய்ரோவில் உலகமாநாடு—செப்ரெம்பர் 9

# பரிந்துரை ஏட்டிற்கு உலக நாடுகளின் எதிர்ப்பு

★

## வத்திக்கான் பாரிய பின் விளைவுகள்

கெய்ரோவில் 9-9-94 இல் ஆரம்பமாகும் சனத்தொகை கட்டுப்பாட்டுக்கான உலக மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் பரிந்துரை ஏட்டிற்த பெருமளவில் எதிர்ப்பு உள்ளதாகவும், அது திருத்தி அமைக்கப்படும் வாய்ப்பு உள்ளது என்றும் கெய்ரோ மாநாட்டிற்கான திருப்பீடக் குழுவில் பங்குபற்றும் குரு சில்வாரோ தொமாஸ்தி கூறினார்.

இப்போதைய பரிந்துரை ஏடு அப்படியே நிறைவேற்றப்படுமேயானால் அதனை முன்னுரைத்த நாடுகளுக்கு அது வெறுமை நிறைந்த வெற்றியாகத்தான் இருக்கும் என்றார் அவர்.

உலக மக்களிடையே கெய்ரோக் கருத்தரங்கின் பின் விளைவுகளுக்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கென திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் குறிப்பிடத்தக்க பணியை ஆற்றியுள்ளார் என்ற தொமாஸ்தி மக்கள் பெருக்கத்தைத் தடுக்கும் முயற்சிக்காக கருக்கலைத்தலை ஊக்குவிப்பதை திருப்பீடம் எதிர்க்கின்றது என்பதையும் தெரிவித்தார்.

கருக்கலைத்தல் பிரச்சனைகள் தவிர பெண்களுக்குரிய மாண்பு, கல்வி, சமூகப் பங்கேற்பு மற்றும் நல ஆதரவுப் பணிகள் மூலம் ஊக்குவிக்கப்பட வேண்டும் எனவும், திருப்பீடம் இக் கருத்தரங்கில் தன் குரலை உயர்த்தவுள்ளதாகத் தெரிவித்தார் குருதொமாஸ்தி.

ஐ நா. பரிந்துரை ஏட்டிற்கு பெருமளவில் எதிர்ப்பு உள்ளதாகவும், அது திருத்தி அமைக்கப்படும் வாய்ப்பு உள்ளதும் என்றார் திருப்பீட அதிகாரி.

★

## பிலிப்பைன்ஸ் அரசு ஏற்காது

மக்கள் தொகைக் கட்டுப்பாடு குறித்து கெய்ரோவில் இடம்பெறவிருக்கும் சர்வதேச மாநாட்டிற்கென பிலிப்பைன்ஸ் எடுத்திருக்கும் நிலை குறித்த விளக்கம் தாங்கிய கடிதத்தை திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பருக்கு அனுப்பியுள்ளார் பிலிப்பைனிஸ் அரசுத் தலைவர்.

கெய்ரோ மாநாட்டிற்கென பிலிப்பைன்ஸ் எடுத்திருக்கும் சில முடிவுகள் குறித்து அந்நாட்டு அரசுக்கும் தலத்திருச்சபைக்கும் இடையே எழுந்துள்ள முரண்பாடுகளை விளக்கவே இக்கடிதத்தை அனுப்புவதாகத் தெரிவித்துள்ளார் அரசுத் தலைவர் பிடெல் ராமோஸ்.

செப்ரெம்பரில் இடம்பெறவிருக்கும் இச் சர்வதேச மாநாட்டில், கற்பழிப்பு, மற்றும் ஒரே பாலினத் திருமணங்கள் குறித்த பரிந்துரைகளை பிலிப்பைன்ஸ் அரசு ஏற்காது எனவும் அரசுத் தலைவரின் கடிதம் கூறுகின்றது.

ஏற்கனவே பிலிப்பைன்ஸ் தலத்திருச்சபை கெய்ரோவின் சர்வதேசமாநாடு குடும்ப மதிப்பீடுகளை அழிவுக்குள்ளாக்குவதாக இருக்கும் என்ற தன் அச்சத்தை வெளியிட்டு அதில் பிலிப்பைன்ஸ் அரசு பங்குகொள்ளக் கூடாது என்ற விண்ணப்பத்தையும் விடுத்துள்ளது.

★

## போலாந்து குடும்பங்களுக்கு அச்சுறுத்தல்

போலாந்து நாட்டில் கருக்கலைத்தலைச் சட்டபூர்வமாக அனுமதிக்க எடுத்து வரும் முயற்சிகளும், பாலின வகையிலான கீழ்த்தரப் பத்திரிகை மற்றும் திரைப் படங்களைக் கட்டுப்படுத்த முடியாத அரசின் நிலையும் குடும்பங்களுக்கு அச்சுறுத்தலாக இருக்க வேண்டுமென எச்சரித்தார் அந்நாட்டு கருதினால் ஜோனிசல் பிரம்.

எக்னகோரா திருத்தலத்தில் கூடியிருந்த ஏறத்தாழ 1 லட்சம் மக்களுக்கு திருப்பலி நிறைவேற்றி மறை உரையாற்றிய கருதினால், கருக்கலைத்தலை ஊக்குவிப்பதும் அதனைச் சட்ட பூர்வமாக அனுமதிக்க முயல்வதும் போலாந்தின் குடும்பங்களை அச்சுறுத்துவதாகத் தெரிவித்தார்.

எக்னகோராவில் கூடிய அந்நாட்டு ஆயர்கள் பேரவை போலாந்து அரசுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வாழ்வின் உரிமைக்கு எதிரான எந்தவொரு சட்டத்தையும் பாராளுமன்றம் நிறைவேற்றக் கூடாது என விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. கருவில் வளரும் குழந்தையைக் கொல்வதை எந்தவொரு சமூகக் காரணமும் நியாயப்படுத்த முடியாது எனவும் தங்கள் கடிதத்தில் கூறியுள்ளனர் போலாந்து ஆயர்கள்.

★

## போத்துக்கல் உறுதியான நடவடிக்கை வேண்டும்

மக்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு ஒழுக்க நெறிக்குப் புறம்பே பிறப்பைக் கட்டுப்படுத்துவதுதான் ஒரே வழி என்பதைக் கைவிட்டு இப் பூமியின் வளங்களை நேர்மையான வழியில் பயன்படுத்தப்படுவதற்கான அனைத்து வளங்களையும் கெய்ரோ மாநாடு ஊக்குவிக்க வேண்டுமென்று போத்துக்கல் நாட்டு ஆயர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

அடுத்தமாதம் கெய்ரோவில் இடம்பெறவிருக்கும் மக்கள் தொகையும் வளர்ச்சியும் பற்றிய உலக வரைபுக்கான தயாரிப்பு பற்றி சில கருத்துக்களைக் கூறியுள்ள ஆயர்கள் தங்கள் மக்களின் பிரதிநிதிகளாக இம்மாநாட்டில் பங்குகொள்வோர் மனித வாழ்வைப் பாதுகாத்து வாழ்வை வளர்ப்பது குறித்து உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றனர்.

★

## பிரான்ஸ் பெண் உரிமை பாதிப்பு

கெய்ரோ மாநாட்டுக்கான ஏடு குறித்து கருத்துத் தெரிவித்துள்ள பிரான்ஸ்நாட்டு ஆயர்கள் பேரவைத்தலைவர் இவ்வேட்டில் குடும்பம் பற்றி மிகவும் குறைவாகவே கொடுக்கப்பட்டுள்ளது. மற்றும் பெண்களுக்கான கருத்தாகும் உரிமையை இவ் ஏடு கட்டுப்படுத்துகின்றது என்றும் குறை கூறியுள்ளார்.

## மட்டு-திருமலை.,.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அந்தோனியார்மகாவித்தியாலயத்திலும், மேற்படிப்பை, புனித மிக்கேல் கல்லூரியிலும் பயின்றார். இறைவனின் அழைப்பை ஏற்று 1984 இல் மட்டக்களப்பு புனித சூசையப்பர் சிறிய குருமடத்தில் சேர்ந்தார். பின்னர் தமது மெய்யியலை, யாழ்ப்பாணம், புனித பிரான்சீஸ் சவேரியார் உயர் குருமடத்திலும், இறையியலை கண்டி இலங்கை மாதா தேசிய குருத்துவக் கல்லூரியிலும கற்றுத் தேர்ந்தார்.

இவருடைய பணி இரத்தம் தோய்ந்த மட்டக்களப்பு / திருகோணமலை மண்ணில் சிறக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்!

## அன்பகத்தில் பொன் விழா

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

விழா எடுக்க அன்பகச் சிறுவர்கள் என்றுமில்லாக் குதூகலத்துடன் புத்தாடை அணிந்து ஆடிப்பாடி நின்றனர்.

எங்கள் அன்பு ஆயர் பேரருள்திரு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராக அவையில் அமர்ந்திருக்க அதிக எண்ணிக்கையில் வந்திருந்த குருமணிகளுடன் ஒன்று சேர்ந்து, விழாநாயகர் உவகை பொங்க நன்றித் திருப்பலி ஒப்புக் கொடுத்தார். அருள்திரு J. P. E. செல்வறாஜா அடிகளார், விழாநாயகரின் வாழ்க்கை வரலாற்றையும், இளம் குருவாக அவர் மடுத்திருப்பதியிலும், போர்க்காலங்களில் அகதி முகாம்களிலும், பங்குகளிலும்,செய்த சேவைகளைத் தம் மறையுரையின் போது எடுத்துக் கூறினார்.

திருப்பலி முடிந்ததும் பாராட்டு வைபவத்தில் அன்பகச் சிறுவர்கள் வாழ்த்துப்பா இசைத்தனர். செல்வன் மா. தார்சன், அமலமரித் தியாகிகள் சபையின் பிரதித் தலைவர் அருள்திரு யேசுநேசன் o. m. i. அடிகளார், யாழ். பல்கலைக் கழக சமூகவியல் விரிவுரையாளர் திரு. N சண்முகலிங்கம் அவர்கள், புனித சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர் திருமதி P. F. சின்னத்துரை அவர்கள், இளைப்பாறிய ஆசிரியர் A. S. அகஸ்ரின் அவர்கள், விழாநாயகர் ஆற்றிய அரும்பெரும் பணிகளைப் போற்றி வாழ்த்துரை வழங்கினர். "இசைத் தென்றல்" ம. யேசுதாசன் அவர்கள் விழாநாயகரை இன்னிசையால் வாழ்த்தினார். கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் சார்பாக செல்வி பிரான்சீஸ் டிம்பிள் அவர்கள் விழா நாயகருக்கு வாழ்த்துப்பா இசைத்து வழங்கினார். கோப்பாயில் இயங்கும், மனித முன்னேற்ற நிலையத்தால் நடாத்தப்படும் "பூங்கா" சிறுவர்களால் வாழ்த்துப்பா வழங்கப்பட்டது.

பொன்விழா நினைவுச் சின்னமாக மேன்மை தங்கிய ஆயர் அவர்களும், விழாநாயகரும், தென்னங் கன்றுகளை நட்டனர். மதிய விருந்தின் போது, அன்பகச் சிறுவர்கள் நாடக விருந்தளித்து அன்பர்களின் உள்ளங்களைக் கொள்ளை கொண்டனர்.

அன்புப் பெருக்கால் நிறைந்து வழிந்த அன்பக இல்லம் பெரும் குருவைப் பெற்ற பேறாற் பெருமை கொண்டது.

ப. மரியநாயகம்

## மடுத்திருப்பதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்டனர். ஆயர் இராயப்பு யோசவ் ஆண்டகை அவர்களால் நிறைவேற்றப்பட்ட இத் திருச்சடங்கில் ஆலய அபிஷேகப் பொன்விழாவுக்காக வருகை தந்திருந்த ஆயிரக் கணக்கான இறைமக்களும் பல குருக்களும் துறவிகளும் கலந்து கொண்டனர்.

யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் தமது குருத்துவப்பயிற்சியை நிறைவு செய்த அருட்சகோதரர்கள் கி. அந்தோனிதாஸ் டலிமா, பி. கிறிஸ்து நாயகம், ம. ஜயபாலன், டே. அலெக்சாண்டர் சில்வா ஆகியோரே தியாக்கோன்களாக திருநிலைப் படுத்தப்பட்டவர்களாவர்.

— தமிழ்நேசன்

## அன்னை திரேசா..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தந்தையால் உருவாக்கப்பட்ட இத்துறையில் மருத்துவம் மற்றும் வாழ்வைப் பாதுகாப்பதற்கான துறைகளில் தேர்ச்சி பெற்ற 70 அங்கத்தினர்கள் உள்ளனர். இன்றும் வாழும் புனிதையாக மதிக்கப்படும் அன்னை திரேசா தன் பிறந்த நாள் பரிசாக 120 செ. மீ. உயரமுள்ள வாக்கிய அட்டை உட்பட பல பரிசுகளைப் பெற்றார்.

கல்கத்தா அன்னை திரேசா இல்லத்தின் முன் அவருக்கு வாழ்த்துச் சொல்வதற்குக் கூடியிருந்த மக்கள் அவரிடம் செய்தி கேட்டபோது தொடர்ந்து இன்னும் பக்தியைக் கொடுக்கும் இறைவனுக்கு நன்றியை கூறுவதாகவும் அதே வேளையில் செய்தியை வளங்குவதில் களைத்திருப்பதாகவும் கூறினார்.

## பேச்சு வார்த்தை

அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் காப்பாற்றுவோம் என்ற தலைப்பில் நைஜீரிய ஆயர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் மோதல்களைக் குறைத்து அமைதிப் பேச்சு வார்த்தைகளை அதிகரிப்பது நீண்டகாலத் தீர்வுக்கு வழி வகுக்க முடியும் எனவும் கூறியுள்ளனர்.

# செய்திச் சாறு

★ திருத்தந்தை தான் ஓய்வு எடுத்துவரும் இத்தாலிய வடமேற்குப் பகுதியில் 90 நிமிடங்களுக்கு இடைவெளியின்றி தொடர்ந்து ஊன்றுகோலின் உதவியுடன் நடந்ததாகக் கூறினார் திருப்பீடப் பேச்சாளர்.

★ நாட்டில் அரசியல் அமைப்புக்களை உருவாக்கவும், அமைதியைப் பேணவும் பணியாற்றி வரும் ஐ. நா. துருப்புக்கள் தாக்கப்பட்டுள்ளது மிகவும் கண்டனத்திற்குரிய செயல் என்றார் ஐ நா. பொதுச் செயலர்.

★ புதிய ஏற்பாட்டின்படி புதிய வியற்நாம் மொழிபெயர்ப்பை வெளியிட அரசு அனுமதி வழங்கியுள்ளதைத் தொடர்ந்து வியட்நாம் கத்தோலிக்க திருச்சபை 30 ஆயிரம் பிரதிகளை அச்சிட்டுள்ளது.

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில்1994 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.